கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.144/2016** **DW: 2** **27.01.2026**

2026ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய ராணி என்பவரின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராணி | வயது | 60 |
| த/க. பெயர் | பன்னீர் செல்வம் | தொழில் | விவசாயம் |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | இராமநத்தம் |
| மாவட்டம் | கடலூர் | | |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வழக்கு சொத்து ஏந்தல் கிராமத்தில் உள்ளது. நான் இராமநத்தத்தில் வசித்து வருகிறேன். நான் சுமார் 40 வருடங்களாக இராமநத்தத்தில் வசித்து வருகிறேன். எனது கணவர் இறந்து விட்டார். நாங்கள் சொத்தை அளந்து தான் சாமிக்கண்ணிடம் இருந்து கிரையம் பெற்றோம். நாங்கள் சர்வேயர் வைத்து நானும் வாதியும் சேர்ந்து அளந்தோம். நான் அளந்து பார்த்து தான் கிரையம் பெற்றதற்கு இந்த நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் சாமிக்கண்ணிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்தின் மொத்த விஸ்திரனம் 84 செண்ட் ஆகும். அதற்கான நான்கெல்லைகள் வடக்கில் என் தகப்பனார் உள்ளார், தெற்கில் வாதி சிவசாமி உள்ளார், மேற்கில் வாதி சிவசாமி உள்ளார், கிழக்கில் சுப்ரமணியன் உள்ளார். இந்த நான்கெல்லை படி தான் என்னுடைய கிரையப்பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த நான்கெல்லை குறிப்பிடாமல் வேறு ஏதேனும் நான்கெல்லை குறிப்பிட்டு என் பத்திரம் எழுதப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சாமிக்கண்ணிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்தை தியாகராஜனுக்கு சுமார் 12 வருடங்களுக்கு முன்பு கிரையம் எழுதி கொடுத்துவிட்டேன். தற்போது அந்த சொத்தில் எனக்கு எந்த உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரிதான். நான் தியாகராஜனுக்கு கிரையம் கொடுக்கும் போது அளந்து பார்த்துக்கொண்டு தான் கிரையம் கொடுத்தேன். அப்படி அளக்கும் போது 84 செண்ட் விஸ்தீரனம் தான் இருந்தது. தியாகராஜனுக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு அந்த சொத்தில் யார் பயிர் செய்தார்கள் என்றால் எனது தகப்பனார் பயிர் செய்து வந்தார், நான் அவ்வப்போது வந்து பார்த்து

செல்வேன். நான் கிரையம் வாங்கும்போது 84 செண்ட் இல்லை என்றும், புருபத்தில் 84 செண்ட் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனார் வடிவேல் படையாட்சி கிரையம் பெற்ற சொத்து, வாதிக்கு பாத்தியமானது, அது வா.த.ச.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டு அதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். வாதியின் இராமசாமியிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்து, வாதிக்கு பாத்தியமானது, அது வா.த.ச.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டு அதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்ற சொத்து 84 செண்ட் புருபத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்கனவே தெரிந்ததாலும், நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வாதி கோரியவாறு தீர்ப்பளிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI Digitally signed by N SHALINI Date: 2026.01.27 16:51:52 +0530

Additional District Munsif,
Tittagudi.